விமான நிலையம் - கிளாம்பாக்கம் வரை

# மெட்ரோ ரயில் சேவையை நீட்டிக்க திட்டம்

சென்னை, டிச. 11: விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரயில்வே சேவையை நீட்டிக்க சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

சென்னையில் முதல் வழித்தட திட்டப் பணிகளானது விமான நிலையத்துடன் முடிவடைகிறது. இந்நிலையில், வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரை மேம்பாலம் வழியாக திட்டம் விரிவுபடுத்தப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. நேரு பூங்கா - சென்ட்ரல், சின்னமலை - டி.எம்.எஸ் இடையிலான வழித்தட சேவையை கடந்த மே மாதம் முதல்வர் தொடங்கி வைத்தார்.

அப்போது, விமான நிலையத்துடன் முடியும் மெட்ரோ ரயில்வே பாதையை வண்டலூர் அருகில் உள்ள கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையம் வரை நீட்டிக்க சாத்திய கூறுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும், என்றார்.

இந்நிலையில், தாம்பரம் அடுத்த கிளாம்பாக்கத்தில் தென்மாவட்ட மக்கள் தங்கள் ஊர்களுக்கு செல்லும் வகையில் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு விரைவில் தொடங்கப்பட உள்ளது. இதையடுத்து, விமான நிலையம் முதல் வண்டலூர் அடுத்த ஜி.எஸ்.டி சாலை அருகில் உள்ள கிளாம்பாக்கம் வரை மெட்ரோ ரயில் பணிகளை விரிவுபடுத்த தற்போது மெட்ரோ ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இந்த சேவையை தாம்பரம் வழியே அமைப்பதற்கான சாத்தியகூறுகளை ஆய்வு செய்ய சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் ஒப்பந்தபுள்ளி கோரியுள்ளது. எந்த வழியே ரயில் பாதையை அமைப்பது, எத்தனை ரயில் நிலையங்கள், எவ்வளவு நிலங்களை கையகப்படுத்த வேண்டும் என்பதை விளக்கும் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறப்படுகிறது.

மெட்ரோ ரயில் சேவை விரிவாக்க பணிக்கு அப்பகுதி மக்கள் வரவேற்பை தெரிவித்துள்ளனர். இந்த சேவை நீட்டிக்கப்பட்டால் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து விமான நிலையம், தாம்பரம் உள்ளிட்ட முக்கிய வழித்தடங்கள் வழியே வண்டலூர், கிளாம்பாக்கம் வரை பொதுமக்கள் பயன்பெறுவர்.



## அமைச்சர் ஆலோசனை

கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தில் அமைச்சர் எம்.சி.சம்பத் நேற்று ஆய்வு செய்தார். அப்போது, டி.எம்.எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையிலான சுரங்கப்பாதையில் நடைபெற்று வரும் மெட்ரோ ரயில் பணிகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். பின்னர், மெட்ரோ ரயில்வே அதிகாரிகள், அமைச்சருக்கு பவர் பாய்ன் பிரசண்டேசன் மற்றும் திட்டத்திற்கான வரைபடத்துடன் விளக்கம் அளித்தனர். இதையடுத்து, அனைத்து பணிகளையும் விரைவில் முடிக்கும் படி அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

மேலும், முதல் வழித்தட திட்டத்தின் நீட்டிப்பு பணியான வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரையில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளின் முன்னேற்றம் குறித்தும் கேட்டறிந்தார். இந்த ஆய்வு கூட்டத்தில் சென்னை மெட்ரோ ரயில்வே மேலாண்மை இயக்குனர் பங்கஜ் குமார் பன்சல் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.